**05.07.2021**

**பொருள் எண்.1**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான அனிமூர் உரக்கிடங்கில் உள்ள 26574cum திடக்கழிவு குப்பைகளை (Legacy waste) Biomining முறையில் 7வது மாநில உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் (7th SHPC) திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19 (SWM)–இன் கீழ் ரூ.175.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு பெறப்பெற்று அதன் பேரில் கடந்த 26.10.2018 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு நாளது வரை 23500cum குப்பைகள் அகற்றப்பட்டு 31.07.2021–க்குள் முழுமையாக பணி முடியும் தருவாயில் உள்ளது. மேலும் தற்போது திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான அனிமூர் உரக்கிடங்கில் மீதமுள்ள திடக்கழிவு குப்பைகளை (Legacy waste) அளவீடு செய்ததில் சுமார் 34211cum உள்ளது. எனவே திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான அனிமூர் உரக்கிடங்கில் தற்போது உள்ள சுமார் 34211cum திடக்கழிவு குப்பைகளை (Legacy waste) Biomining முறையில் அகற்ற ரூ.270.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அரசின் திட்டத்தின் கீழ் முழுமான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்ககோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு உரிய பிரரேனைகள் அனுப்ப மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.3831/2021/இ1)

**பொருள் எண்.2**

திருச்செங்கோடு நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஆவத்திப்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் தினசரி 2.50 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு அதற்குரிய கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் திருச்செங்கோடு நகராட்சிக்கு என புதிய குடிநீர் ஆதாரம் தோற்றுவிக்கும் பணிக்கு ரூ.83.85கோடி மதிப்பீட்டிற்கு ( IUDM Share – 81.22 கோடி, ULB-2.63 கோடி) ஒருங்கிணைந்த நகரபுற மேம்பாட்டு வளர்ச்சி திட்டம் (IUDM) 2018–19 மற்றும் 2019–20–இன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD), நாமக்கல் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு தற்போது சோதனை ஓட்டம் (Trial Run) நடைபெற்று வருகிறது. மேலும் இந்நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்.745, நாள்.27.10.2014–இல் புதிய குடிநீர் ஆதாரம் தோற்றுவிக்கும் பணி மூலம் குடிநீர் விநியோகம் தொடங்கிய பின்னர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஆவத்திபாளையம் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் பெறப்படும் குடிநீரை துண்டிப்பு (Delink) செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்படி தற்போது புதிய குடிநீர் ஆதாரம் தோற்றுவிக்கும் பணியின் சோதனை ஓட்டத்தின் மூலம் 6 MLD வரை குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு நகராட்சிக்குச் சொந்தமான சந்தைப்பேட்டை நீருந்து நிலையத்திற்கு வருவதால், ஆவத்திபாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வழங்கும் 2.50MLD குடிநீர் விநியோகத்தை துண்டிப்பு செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 11492/2012/இ1)

**<u>பொருள் எண்.3</u>**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பொது சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனம் எண் TN34 D3973–க்கு வருடந்தோறும் இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்தப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டு இவ்வாகனத்திற்கு செலுத்தப்பட்ட இன்சூரன்ஸ் பிரிமியம் காலக்கெடு எதிர்வரும் 20.05.2021–ந் தேதியுடன் முடிவடைகின்றது. எனவே நடப்பு ஆண்டுக்கு இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையான ரூ.38,742/–ஐ செலுத்த வேண்டி M/s.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., திருச்செங்கோடு கிளைக்கு ரூ.38,742/–ஐ செலுத்துமாறு கடிதம் வரப்பெறப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையான ரூ.38,742/–ஐ M/s.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., திருச்செங்கோடு கிளைக்கு செலுத்தவும் இச்செலவின தொகையினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி, வாகனம் எண் TN34 D3973–க்கு இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையான ரூ.38,742/–ஐ M/s.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., திருச்செங்கோடு கிளைக்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.2274/2021/எச்1)

**<u>பொருள் எண்.4</u>**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பொதுசுகாதார பணிகளுக்காக பயன்படுத்தப்படும் வாகனம் எண் TN34 D3972–க்கு வருடந்தோறும் இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்தப்பட்டு வருகின்றது. சென்ற ஆண்டு செலுத்தப்பட்ட இன்சூரன்ஸ் பிரிமியத்திற்கான காலக்கெடு எதிர்வரும் 20.05.2021–ந் தேதியுடன் முடிவடைகின்றது. எனவே நடப்பு ஆண்டுக்கு இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையான ரூ.38,742/–ஐ செலுத்த வேண்டி M/s.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., திருச்செங்கோடு கிளை மூலம் கடிதம் வரப்பெறப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையான ரூ.38,742/–ஐ M/s.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., திருச்செங்கோடு கிளைக்கு செலுத்தவும் இச்செலவின தொகையினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி, வாகனம் எண் TN34D 3972–க்கு இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையான ரூ.38,742/–ஐ M/s.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., திருச்செங்கோடு கிளைக்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.2922/2021/எச்1)

**<u>பொருள் எண்.5</u>**

திருச்செங்கோடு நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து கடந்த 30.06.2019 அன்று ஓய்வு பெற்ற திரு.மு.சேரலதான் என்பவர் பணிபுரிந்த காலங்களில் காலங்கடந்த வரியினங்கள் வசூலிக்கப்படாததால் அன்னாரின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து ரூ1,67,576/–ஐ பிடித்தம் செய்ததை ஆட்சேபித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண்:WP.NO:28849/2019 தொடந்து இவ்வழக்கில் இடைகால தடை ஆணையும் பெற்றுள்ளார். இவ்விடைகால தடையாணை குறித்து நாமக்கல் மாவட்ட அரசு வழக்கறிஞர் திரு.M.ரவி மற்றும் மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகியுள்ள சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு.P.ஸ்ரீனிவாஸ் ஆகியோர் சட்டக் கருத்துரு வழங்கியுள்ளார்கள். சட்ட கருத்துரு கட்டணமாக மாவட்ட அரசு வழக்கறிஞருக்கு ரூ.5000/– மற்றும் சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு. P.ஸ்ரீனிவாஸ் அவர்களுக்கு ரூ.5000/–ம் வீதம் ரூ.10,000/–ஐ மேற்கண்ட வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.3430/2019/சி1)

பொருள் எண்.6

நகர்மன்ற தீர்மான எண்.152, நாள்.26.05.2021–இல் ரூ.90,000/– வருவாய் நிதி 2021–22–இன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி 02.07.2021 அன்று நடைப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.4 நெசவாளர் காலனி மற்றும் வார்டு எண்.18 புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள நுண் உரச்செயலாக்க கூடத்தில் (MCC Centre) உள்ள Shredder Machine–இல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யும் பணி | ரூ.90,000/- | 1. M. செந்தில் குமார்<br>2. M/s. ஜெயம்மாருதி எலக்ட்ரிக்கல்ஸ், | (-)0.05 % குறைவு<br>(+) 0.03 % அதிகம் |

அலுவலகக் குறிப்பு :

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–)0.05% குறைவாக கொடுத்துள்ள திரு. M. செந்தில் குமார், அவர்களின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

(கோப்பு எண்.3159/2021/இ1)

பொருள் எண்.7

நகர்மன்ற தீர்மான எண்.151, நாள்.26.05.2021–இல் ரூ.9.90 இலட்சம் குடிநீர் நிதி 2021–22–இன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி 02.07.2021 அன்று நடைப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 17 வரை பகுதிகளில் உள்ளஆழ்துளை கிணறுகள் மற்றும் Open well ஆகியவற்றில் உள்ள மோட்டார், பேனல் போர்டு மற்றும் இதர உதரிபாகங்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணி | ரூ.9,90,000/- | 1. M. செந்தில் குமார்<br>2. M/s. ஜெயம்மாருதி எலக்ட்ரிக்கல்ஸ், | (-)0.17 % குறைவு<br>(+) 0.46 % அதிகம் |

அலுவலகக் குறிப்பு :

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–)0.17% குறைவாக கொடுத்துள்ள திரு.M. செந்தில் குமார், அவர்களின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

(கோப்பு எண்.3166/2021/இ2)